# இனக்கலவரத்தை தடுக்க கடும் நடவடிக்கை

## ரத்வத்த கூறுகிறார்

(கொழும்பு) நாட்டில் இனக்கலவரம் ஒன்று வெடிக்கலாம் என்பதற்காகவே ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அநுருத்த ரத்வத்த பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது: ஊரடங்குச் சட்டத்தை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். நாட்டில் பதற்றம் இருக்கும் வரைக்கும் ஊரடங்குச் சட்டமும் அமுலில்இருக்கும். கலவரம்ஏதும் ஏற்படாதிருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிலபகுதிகளில் வதந்திகள் பரப்பப்படுவதால் பதற்றம் ஏற்படுவதாகவும் மக்கள் (6-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 10 இதழ் 265
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 27-10-1994

## விடுதலைப் புலிகள் மீது குற்றம் சாட்டுவது பிழை

(கொழும்பு) காமினி திசநாயக்காவின் கொலைக்கு விடுதலைப் புலிகள் மேல் குற்றம் சாட்டுவது ஒரு பிழையான கூற்றாகும் என்று இரத்தினபுரி மாவட்ட எம்.பி. வாசுதேவ நாணயக்காரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; கடந்த 17 வருடகால ஐக்கியதேசியக் கட்சியின் படுகொலை அரசியல் இன்றும் நீங்கவில்லை. என்பதற்கு ஆதாரமாக பல அரசியல்வாதிகள் கொல்லப்பட்டனர். (6-ம் பக்கம் பார்க்க)

### தற்போதைய சூழ்நிலையால்

# அரசு-புலிகள் சமாதானப் பேச்சு தற்காலிகமாக ஒத்திவைப்பு!

## அமைச்சர் ரத்வத்த கூறுகிறார்

[கொழும்பு]

கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்பையடுத்து அரசுக்கும்-விடுதலைப் புலிகளுக்கு மிடையிலான சமாதானப் பேச்சுக்கள் முற்றாக ரத்துச் செய்யப்படவில்லை என்றும் இது தற்காலிகமாகவே ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அநுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இதனை தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், பாலத்துறை குண்டுவெடிப்பில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. காமினி திஸநாயக்கா உட்பட ஐ. தே. க. உறுப்பினர்கள் பலர் பலியான சம்பவத்தைத் தொடர்ந்தே இருதரப்பு பேச்சுக்களும் ஒத்தி (6-ம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க. தலைமையகத்தில் ரணிலுக்கு மிரட்டல்

(கொழும்பு) முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் ஐ. தே. கட்சியின் தலைமைக் காரியாலயமான ஸ்ரீகோத்தாவிற்கு சென்ற வேளையில் சில நபர்களால் அவர் அச்சுறுத்தப்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். (2ம் பக்கம் பார்க்க)

## காமினியின் மனைவிக்கு வெற்றி வாய்ப்பில்லை

(கொழும்பு) ஜனாதிபதி தேர்தலில் ஐ. தே. கட்சிக்கு அனுதாபவாக்குகள் கூடுதலாகக் கிடைத்தாலும் ஜனாதிபதித் தேர்தலில், இக்கட்சி ஒருபோதும் வெற்றி பெறமாட்டாது'' (6-ம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கை மீறப் போவதாக ஐ. தே. க. கடும் எச்சரிக்கை

[கொழும்பு] காமினி திசநாயக்காவின் இறுதிச்சடங்குகளில் மக்கள் பங்குபற்றுவதை தடுப்பதற்கே அரசினால் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று, கலாநிதி விக்கிரம வீரசூரிய தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்; மகாவலி, நுவரெலியா மற்றும் தென்பகுதிகளில் இருந்து பலர் இறுதிச்சடங்குகளில் கலந்து கொள்ள விருப்பதாக அறிவித்துள்ளார்கள். (6-ம் பக்கம் பார்க்க)

## கொலைக்கு காரணம் தற்கொலையாளியா?

(கொழும்பு) தற்கொலை கொலையாளி ஒருவர் தான் காமினி திஸநாயக்கா கொல்லப்படக் காரணமாயிருந்த குண்டுத் தாக்குதலை நடாத்தியது என்ற கருத்தில்தான். தற்போது விசாரணைகள் நடாத்தப்பட்டு வருவதாக பொலிஸ்மா அதிபர் (6-ம் பக்கம் பார்க்க)

## அரசு - புலிகள் சதியாலேயே காமினி கொலையுண்டாராம்

### ஐ. தே. க. குற்றச்சாட்டு

(கொழும்பு) அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான ஒரு சதியின் அங்கமே காமினி திஸநாயக்காவின் படுகொலையென எதிர்க்கட்சியான ஐ. தே. க. குற்றம் சாட்டியுள்ளது.

இக் குற்றச்சாட்டை முன்னாள் சபாநாயகர் எம். எச். முகமதுவும் கட்சியின் ஏனைய முக்கிய தலைவர்கள் பலரும் சுமத்தியுள்ளனர். இக் குற்றச்சாட்டில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்; (6-ம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு உதவி தேவையில்லையாம்

(கொழும்பு) காமினியின் கொலைகுறித்து விசாரணை நடாத்த வெளிநாட்டு உதவி எதுவும் தேவையில்லையென அவரது மைத்துனர் கலாநிதி விக்கிரம வீரசூரியா தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுஉதவி தேவைப்பட்டால் அதற்கு ஏற்பாடுகள் (6-ம் பக்கம் பார்க்க)

## அரசு மறுப்பு

(கொழும்பு) காமினியின் கொலைக்கு அரசு - புலிகள் கூட்டுச்சதியே காரணமென ஐ.தே.க. தெரிவித்த குற்றச்சாட்டை அரசு வன்மையாக மறுத்துள்ளது.

இதுகுறித்து அமைச்சரவை பேச்சாளர்திரு. தர்மசிறிசேன நாயக்கா அரசின் இந்த மறுப்பை நேற்று தெரிவித்தார். (6-ம் பக்கம் பார்க்க)

## இராணுவ அதிகாரிகள் பலர் பதவி நீக்கப்படலாம்

(கொழும்பு) ஜனாதிபதி தேர்தலின் பின் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஹமில்டன் வனசிங்க உட்பட இராணுவ அதிகாரிகள் பலரும் பதவி நீக்கப்படலாமென செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதிக்கு கீழே முப்படைகளும் இருப்பதால் தற்போது இவர்களை பதவி நீக்கமுடியாத நிலையில் பிரதமர் சந்திரிகா உள்ளாராம், ஜனாதிபதி தேர்தலில் திரு (6ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatitis) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1254)

### விஞத்தாள் திட்டமிடல்

ஆண்டு 4 - 11 மூன்றும் தவணை விஞத்தாள்களைத் திட்டமிட்டுத் தயாரித்தல், விடைத்தாள் பகுப்பாய்வு - சகல விபரங்களுக்கும் மாதிரி விஞக்களும் படிவங்களும் கொண்ட 'மதிப்பீடு' - ரூபா முப்பது மட்டுமே. யாழ். ஸ்ரீ சுப்பிரமணியம், ஸ்ரீலங்கா, சுன்ஞகம் தனலக்குமி பொத்தக சாலைகள். (சி-1285)


★ சிங்கப்பூருக்கு

# உத்தியோகபூர்வமாக சந்திரிகா செல்ல டி.பி. மறுத்திருந்தார்

(கொழும்பு)

பிரதமர் சந்திரிகா உத்தியோக பூர்வமாக சிங்கப்பூர் செல்வதற்கு அனுமதி கேட்ட போது ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க அனுமதி மறுத்ததினால் தான் அவர் தனிப்பட்ட விஜயமாக சிங்கப்பூர் சென்றிருந்தார் என்று 'யுக்திய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

அவர் உத்தியோக பூர்வமாக சிங்கப்பூர் சென்றிருந்தால் இவர் பதவியை துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்று பிரசாரம் மேற்கொள்வதற்கும் ஐ. தே. க. வினர் தயாராகி இருந்தனர் என்றும் செய்திகள் தெரிவித்ததாக 'யுக்திய' பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

தனிப்பட்ட விஜயமாக இவர் சென்ற போது பாதுகாப்பு பிரச்னை எழுந்ததாகவும் பாதுகாப்பு விதிகள் சிலவற்றை இவர் மீறியுள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (ம-சி)

★ ரூபவாஹினி தலைவர்

# வசந்தராஜாவின் பதவியை உறுதிப்படுத்த மறுப்பு?

(கொழும்பு)

ரூபவாஹினி கூட்டுத்தாபனத் தலைவரான வசந்தராஜாவின் பதவியை தகவல் அமைச்சர் இதுவரை உறுதிப்படுத்தி கையெழுத்திடவில்லை என்று 'ஹிரு' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இவர் இலங்கைப் பிரசை அல்லவென்றும், பிரித்தானி நாட்டுப் பிரசையானபடியால் இவரின் பதவி நியமனத்துக்கு பல முட்டுக்கட்டைகள் ஏற்பட்டுள்ளதென்று 'ரூபவாஹினி' கூட்டுத்தாபன அதிகாரிகளை மேற்கோள் காட்டி 'ஹிரு' மேலும் தெரிவித்துள்ளது.

கடந்த அரசாங்க காலத்தில் லேக்கவுஸ் நிறுவனத்தின் 'ஒப்சேவர்' பத்திரிகையின் ஆசிரியர் பதவிக்கு நியமிக்கப்பட்ட எச். எல். டி. மகிந்தபால அவுஸ்திரேலிய நாட்டுப் பிரசையான படியால் இப்படியான ஒரு நெருக்கடி நிலை அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. -ம-சி

# இராசி பலன்

27 - 10 - 1994

வியாழக்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி- 10)

அட்டமி காலை 6-00 வரை, பூசம் முழுவதும், அமிர்த யோகம், இராகுகாலம் பகல் 1-33 முதல் 3-01 வரை, சுப நேரம் காலை 9-31 முதல் 10-24 வரை.

மேடம்: நேத்திரரோகம், இனசனக் கஷ்டம், வெறுப்பு.

இடபம்: காரியசித்தி, நல் முயற்சி, அவசர உதவி.

மிதுனம்: நடைக் கஷ்டம், வாக்குவாதம், பணமுடை.

கடகம்: நன் மதிப்பு, தொழில் சிறப்பு, பயணம்.

சிங்கம்: சரீரச் சோர்வு' இடையூறு, அலைச்சல்.

கன்னி: அதிகார விருத்தி, போசன சுகம், பாராட்டு.

துலாம்: இல்லச் சிறப்பு, பிறர் உபகாரம், விருந்து.

விருச்சிகம்: வீண்பழி கேட்டல், மனக் கவலை, யோசனை'

தனுசு: ஐஸ்வரியக்கேடு, நண்பர் வெறுப்பு. பதட்டம்.

மகரம்: சத்துரு ஜெயம், தர்ம காரியம், குடும்பசுகம்,

கும்பம்: மோகநீக்கம், சயன சுகம், காரியபலிதம்.

மீனம்: சபாபுத்தி, தன் நிலை இழப்பு, மனக் கசப்பு.

—ஜோஸ்யர்

## பொறுப்புகளை ரணில் எற்ருர்

(கொழும்பு)

ஐ. தே. கட்சியின் பிரதித் தலைவராக முன்னுள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலைபொறுப்பேற்றுக் கொண்டார்.

நேற்றுக்காலை ஐ. தே.கட்சியின் தலைமைக் காரியாலயமானஸ்ரீகோதாவிற்கு சென்று அவர் இப்பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். க-சி

## கோமாரி புறப்படும்

(நெல்லியடி)

பருத்தித்துறை துறைமுகத்தில் மா இறக்கும் கோமாரி கப்பல் இன்று மாலை திருமலைக்குப் புறப்படுகிறது.

இக்கப்பல் அங்கிருந்து மீண்டும் மா ஏற்றிக்கொண்டு இரண்டொரு தினங்களில் பருத்தித்துறையை வந்தடையும், - 162

# முதற்கட்ட பேச்சு குறித்து டி.பிக்கு அறிவிக்கப்படவில்லை

(கொழும்பு[

விடுதலைப் புலிகளுக்கும்- அரச பிரதிநிதிகளுக்குமிடையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற முதல் கட்டப்பேச்சுக் குறித்து ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லையாம்.

ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சராகவும், முப்படைகளுக்கும் பொறுப்பாளராகவும் இருப்பதால் இப்பேச்சுக்கள் குறித்த விபரம் எதுவும் அறிவிக்கப்படாதது குறித்து ஜனாதிபதி செயலகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுடன் அரசு முதற்கட்ட பேச்சை நடாத்த முன்பும் நடாத்திய பின்பும் வானொலி மற்றும் செய்தித் தாள்கள் மூலமே இந்த பேச்சுக்கள் குறித்த செய்திகளை ஜனாதிபதி செயலகம் அறிந்து கொண்டதாம். (சி)

## ரணிலுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இது பற்றி பொலிசார் மேலும் தெரிவிக்கையில்:- ஐ. தே. கட்சிசார்பில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்யும் கூட்டத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு ஐ தே. கட்சி தலைமைக் காரியாலயத்துக்கு திரு. ரணில் சென்ற வேளையில் இவ்வாறு அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

திரு. ரணில் விக்கிரமசிங்கவின் பிரதம பாதுகாப்பு அதிகாரியான பொலிஸ் அத்தியட்சகர், லோறன்ஸ் மிருகானை பொலிசில் இத்தகையமுறைப்பாட்டை செய்துள்ளார்.

ரணிலின் வாகனத்தை சூழ்ந்துகொண்ட கோஷ்டியினர் அவருக்கு கொலைப் பயமுறுத்தல் விடுத்ததுடன் துர்வார்த்தைகளால் தூஷித்தனர். அவரது வாகன முன் பக்க கண்ணுடியும் சேதமடைந்துள்ளது.

இச்சம்பவம் பற்றி உடனடியாக உரிய விசாரணை நடாத்தப்படுமென பொலிஸ்மா அதிபர் பிராங் டிசில்வா தெரிவித்துள்ளார். -க-சி

மல்லிமாராச்சியின் இடத்திற்கு

# இ. தொ. கா. உறுப்பினர்

(கொழும்பு)

குண்டு வெடிப்பில் உயிரிழந்த முன்னுள் அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சியின் இடத்திற்கு இ. தொ. காவை சேர்ந்த ஒருவரே நியமிக்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது

கொழும்பு மாவட்டத்திலிருந்து ஐ. தே. க. சார்பில் திரு. மல்லிமாராய்ச்சி தெரிவு செய்யப்பட்டிருந்தார். தற்போது இவர் மரணமாகி விட்டதால் இம் மாவட்டத்தில் ஐ. தே. க. சார்பில் போட்டியிட்டு தெரிவானவர்களை விட அடுத்து கூடிய விருப்பு வாக்கை பெற்றவர். யானை சின்னத்தில் இ. தொ. கா, சார்பில் போட்டியிட்ட திரு. ஆர் யோகராஜா என்பவர்,

இவரே திரு- மல்லிமாராச்சியின் இடத்திற்கு தெரிவு செய்ய ப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது. (சி]

# காணமல்போன பெண் எலும்புக்கூடாக மீட்பு

(நெல்லியடி)

கடந்த மூன்று வாரங்களுக்குமுன்னர் வீட்டிலிருந்து புறப்பட்ட விதவைப் பெண் ஒருவர் எலும்புக்கூடாக நேற்றுக்காலை ஏரியிலிருந்து மீட்கப்பட்டார்,

தம்பாலையை வசிப்பிடமாகக் கொண்டவரும், இராணுவநடவடிக்கையினுல்இடம் பெயர்ந்து தற்பொழுது நீர்வேலி வடக்கில் வசித்துவந்தவருமான விதவைப் பெண்ணுன திருமதி சீவரத்தினம் குணபாக்கியம் (வயது-57) என்பவரே எலும்புக்கூடாக வல்லை முனியப்பர் ஆலயத்தின் பின்புற ஏரியிலிருந்து மீட்கப்பட்டார்.

இப்பகுதிக்கு மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களே: இப்பெண்ணின் எலும்புக்கூட்டை கண்டு பிடித்தனர்.

தகவலறிந்த பெண்ணின் உறவினரும், வல்வெட்டித்துறை காவல் துறையினரும் ஸ்தலத்திற்கு சென்று விசாரணைகள் நடைபெற்ற பின்னர் உறவினரால் எலும்புக்கூடு எடுத்துச் செல்லப்பட்டு நேற்று நண்பகல்வேளை அருகிலுள்ள இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது'

(160-சி)


## அச்சகத்துறைக்கு எமது பங்களிப்பு

11 – 12 – 18 – 24 – 36 பொயின்ற்ஸ் எழுத்துக்களை

உங்கள் தேவைகளுக்கேற்ப பெற்றுக்கொள்ள நாடுங்கள் :

**புதிய வர்த்தக அச்சகம்,**

பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(ஏ-4457)


# சகல பகுதிகளுக்குமான விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

''பனை அபிவிருத்திச்சபை ஊழியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று பனை அபிவிருத்தி சபை மண்டபத்தில் இன்று காலை 10-00 மணிக்கு இடம்பெறும்.

செயலகத்தில் சகல திணைக்களங்களின் ஊழியர்களுக்கான கலந்துரையாடல்இன்று காலை 10 மணிக்கு நாவலர் மண்டபத்தில் இடம்பெறும்.

வீதி அபிவிருத்தி திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கட்டடத்திணைக்களம், கட்டட அதிகாரசபை, நீர்ப்பாசன திணைக்களம், கமநலசேவை திணைக்களம் ஆகியவற்றின் ஊழியர்களுக்கான கலந்துரையாடல் இன்றுபகல் 11.30 மணிக்கு நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

யாழ் கோட்டம்: சகலபாடசாலை அதிபர் ஆசிரியர்கள் ஊழியர்களுக்கான கலந்துரையாடல் இன்று பகல் 1மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறும்:

நல்லூர்க் கோட்டம் சகல பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் ஊழியர்களுக்கான கலந்வரையாடல் இன்று பகல் 1 மணிக்கு யாழ், இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

வேலணை ஊர்காவற்றுறைக் கோட்டம் சகல அதிபர், ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று பகல் 1 மணிக்கு யாழ்.சென்யோன்ஸ் கல்லூரி எதிரிலுள்ள ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் பாடசாலையில் நடைபெறும்.

தபால் திணைக்களம் தொலைதொடர்பு திணைக்களம், மின்சாரசபை ஊழியர்களுக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்,இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

அனைவரும் தவருது சமூகமளிக்கும்படி தமிழீழ நிர்வாக சேவையினர் கேட்டுக் கொள்கிருர்கள். (சி)

## ஹரிகுணதிலக புதிய பணிப்பாளர்

(கொழும்பு)

இலங்கை விமானப்படையின் முன்னுள் தளபதி ஏயர் மாஷல் ஹரிகுணதிலக எயர் லங்காவின் புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று ராவய 'பத்திரிகை' தெரிவித்துள்ளது.

இவர் கடந்த ஒக்டோபர் மாதம் 5ம் திகதியில் இருந்து இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் 'ராவய' தெரிவித்துள்ளது. (ம-சி)

## ஓட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்(

''யாழ்.மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவால் நடாத்தப்படும்மாவட்ட விளையாட்டுப் போட்டியின் ஐந்தாம் நாள் நிகழ்வாக நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு ஆண்கள், பெண்களுக்கான பத்தாயிரம் மீற்றர் ஓட்டப் போட்டிகள் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளுக்கு வலய ரீதியாக நாடாத்தப்பட்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற போட்டியாளர்களையும் நாளைகாலை 7 மணிக்கு பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்திற்குச் சமூகமளிக்குமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுக்கொள்கின்றது, (ரி)

நல்லூர் கிளைநூலகம்.

★ கொழும்பு குண்டுவெடிப்பு

# கொலையாளி பற்றிய தடயம் பொலிஸாரால் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்பினை நடத்திய கொலையாளி பற்றிய தகவல்களை கண்டுபிடிக்க கூடிய தடயம் கிடைத்துள்ளதாக கொழும்பு பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

தனியார் படப்பிடிப்பாளர் ஒருவரினல் மேடையில் கைவிடப்பட்ட புகைப்படக் கருவி மூலம் இக் கொலையாளியை கண்டு பிடிப்பதற்கான புகைப்படச்சுருள் கிடைத்துள்ளது.

இந்த புகைப்படத்தில் கொலையாளி இருக்கின்ருரா? அப்படியிருந்தால் யார் அவர் என்ற விபரங்களை அறிவதில் இரகசியப் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்ருர்கள்.

இதேவேளை குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட புகைப்படப்பிடிப்பாளரின் இறுதி நேரப் புகைப்படங்கள் பொலிஸார் வசம் சிக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி படப்பிடிப்பாளரின் கமராவிலிருந்து எடுக்கப்பட்ட படங்கள் பலவற்றில் கூட்டத்தின் முன் நின்றவர்களில் காணப்படும் மக்களில் ஒரு ஆணையும் ஒரு பெண்ணையும் இனம் காண்பதற்கு சி. ஐ. டி. அதிகாரிகள் தற்பொழுது முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

புகைப்படத்திலே சந்தேகத்திற்குரிய வகையில் காணப்படும் ஒரு பெண்ணே தற்கொலை குண்டுத்தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று பொலிஸார் கருதுகின்றனர். (ரி)

---

குண்டு வெடிக்க முன்

# வெளியேறியோர் மீது பொலிஸார் நோட்டம்

(கொழும்பு)

குண்டு வெடிப்பு சம்பவத்திற்கு முன்னர் இருப்பிடங்களை விட்டு வெளியேறியோர் மீது பொலிஸார் தீவிர நோட்டமிட்டுள்ளனர்.

கொட்டாஞ்சேனை விடுதி ஒன்றிலிருந்து வவுனியா சென்று திரும்பிவருவதாக கூறியவ ா லி ப ர் குறித்தும் சவூதிஅரேபியா செல்வதாக கூறிய யுவதிகுறித்தும் பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டிருக்கிருர்கள். ரி-சி

---

# 135 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம்

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் 135 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான ஏற்பாடுகள் கல்வி அமைச்சினுல் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதுடன் இவர்களுக்காக பாடசாலைகளும் வழங்கப்படவுள்ளது. (ரி)

---

# யுத்த நிறுத்தம் குறித்து படையினருடன் பேசவில்லை

[கொழும்பு]

வடக்கு-கிழக்கு பகுதியில் யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்படுவது பற்றி இதுவரை படையினரின் அபிப்பிராயம் எதுவும் அறியப்படவில்லை என பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியுள்ளன.

புலிகளுடனுன 2-ம் கட்டப் பேச்சுக்களின் பின்பே அரசு இதுகுறித்து பாதுகாப்புப் படையினருடன் முடிவெடுக்க ஆலோசித்திருந்ததாகவும், காமினியின் கொலையையடுத்து 2-ம் கட்டப் பேச்சுவார்த்தை ரத்துச்செய்யப்பட்டதால் அடுத்த நடவடிக்கைகள் யாவும் தற்போது ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

மேலும் யுத்த நிறுத்தம் ஒன்று ஏற்படுவதற்கு இராணுவ தரப்பினர் கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்ததாகவும் இவ்விடயத்தில் அரசுக்கும்-படையினருக்குமிடையில் பெரும் முரண்பாடு ஏற்பட்டிருக்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது. —சி

---

காமினி கொலை

# விசாரணைக் கமிஷனுக்கு ஐ. தே. க. கோருகிறது

(கொழும்பு)

ஜனதிபதி வேட்பாளர் திரு. காமினி திஸநாயக்கா மற்றும் முன்னுள் அமைச்சர்களும் படுகொலை செய்யப்பட்டது குறித்து விசாரணைக் கமிஷன் அமைக்க ஐ. தே, கட்சி கோரிக்கை விடுத்துள்ளது,

இக்கொலை தொடர்பாக உயர்நீதிமன்ற நீதியரசர் தலைமையில் விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட வேண்டும் என்று ஐ. தே. க. வின் நாடாளுமன்றக் குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. (ரி-சி)

---

## விஜயதாசாவுக்கு புதிய பதவி

(கொழும்பு)

பொதுநல வாய நாடுகளின் செயலாளராக தற்போது ஜனதிபதியின் செயலாளரான கே. எச். ஜே. விஜயதாச நியமிக்கப்படுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் புதிய பகவியை அமைச்சரவையும் அங்கீகரித்தபின் வெளிநாட்டு அமைச்சின் ஊடாக பொதுநல வாய நாடுகளுக்கு அறிவிககப்படும்என்று சுதிர்பார்க்கப்படுகிறறு. ம-சி

---

## குழாய் கிணறு

[கொழும்புத்துறை]

உடுவில் மல்வம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் அண்மையில் தேச நிர்மாணிகளால் குழாய் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. [154]

---

எல்லைகளை பலப்படுத்திய பின்பே

# புலிகளுடன் யுத்தநிறுத்தம்

— சந்திரிகா கூறியிருந்தார்

(கொழும்பு)

வடக்கு—கிழக்கில் யுத்த நிறுத்தம் ஒன்று ஏற்படுவதாயின் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளின் எல்லைகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்ட பின்பே ஏற்படுத்தப்படும் என்று கடந்த வாரம் பிரதமர் சந்திரிகா கூறியிருந்தார்.

அம்பாறையில் நடைபெற்ற ஜனதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் இதனை தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்:

யுத்த நிறுத்தம் ஒன்று ஏற்படுவதாயின் முன்னர் ஐ. தே. க. ஆட்சியில் நடைபெற்றதுபோல் பொறுப்பற்றவிதத்தில் அது அமுல்படுத்தப்படாது. எல்லைகளில் பாதுகாப்பு நன்கு போடப்பட்ட பின்பே அது அமுலுக்குவரும்.

தெற்கிலே மனித புதைகுழிகள் தோண்டப்படுவதற்கு 99 சதவீத பொலிசாரும் இராணுவத்தினரும் ஆதரவளித்துள்ளதுடன் இதற்கு காரணமானவர்களைக் கண்டுபிடிக்குமாறும் கேட்டுள்ளனர். இவ்வாருன குற்றச் செயல்களுக்கு ஒரு வீதமான பொலிசாரும், இராணுவத்தினருமே காரணம். படையிலுள்ள பெரும்பாலானவர்கள் இவ்வாருன படுகொலைகளை ஆதரிக்கவில்லை. ஐ. தே. க. ஆட்சியாளர்களால் பல வருடங்களாக தீர்க்கப்படமுடியாத வடக்கு-கிழக்கு பிரச்னை ஒன்று இரண்டு நாட்களில் தீர்க்கப்பட முடியாது. எமது நோக்கம் இந்த யுத்தத்தை நிறுத்தி அதன்மூலம் உயிரழிவை தடுத்து நிறுத்துவதே எனவும் கூறினுர். (சி)

---

# தஞ்சாவூர் மாநாட்டில் புத்தக கண்காட்சி

(வேலணை)

தஞ்சாவூரில் நடைபெற உள்ள எட்டாவது தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டின் போது மாபெரும் புத்தகக் கண்காட்சி ஒன்றும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தபுத்தகக்கண்காட்சியில் பழைய புதிய நூல்கள் ஏடுகள் என்பன காட்சிக்கு வைக்கப்படவுள்ளன. இக் கண்காட்சிக்கு நூல்கள் ஏடுகள் இருப்பின் அவற்றை அனுப்பிவைக்கவிரும்புவோர். செயற்பாட்டு,அமைப்புக் குழு எட்டாவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு தஞ்சாவூர் 613005 தமிழ்நாடு, இந்தியா என்ற விலாசத்திற்கு நூல்களை கடல் வழி அஞ்சல் மூலமாக மிகக்குறைந்த செலவில் அனுப்பி வைக்கமுடியுமென உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தினரின் இலங்கைக் கிளையினர் தெரிவித்துள்ளனர். (75-ரி)

---

# வாழைச்சேனை பிரதேசசபை ரெலோ உறுப்பினர் கொலை

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை பிரதேச ரெலோ பொறுப்பாளரும் பிரதேசசபை உறுப்பினருமான எஸ். கிருஷ்ணனந்தன் என்பவர் கடந்த வியாழக்கிழமை காலை வாழைச்சேனை நகரில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

இனந்தெரியாத இளைஞர் ஒருவர் இவர் மீது கைத்துப்பாக்கியால் நான்கு தடவை சுட்டதால் இவர் படுகாயங்களுக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபோது அங்கு மரணமாளுராம்.

இச்சம்பவத்தையடுத்து அங்கு விரைந்த இராணுவத்தினர் வாழைச்சேனைப் பகுதியை சுற்றிவளைத்தபோது கிரனைட் தாக்குதலும் நடாத்தப்பட்டது. இதனுல் இரு படையினர் படுகாயமடைந்தனர்.

வாழைச்சேனை மக்கள்வங்கிக்கு முன்பாக காலை 10-30 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றதை தொடர்ந்து கடைகள், பாடசாலைகள் யாவும் உடனடியாக மூடப்பட்டனவாம். -சி

---

# வடக்கில் தேர்தல் நடாத்த

## பொலிஸாரின் சிபார்சு தேவை?

[கொழும்பு]

வடக்கில் ஜனதிபதித் தேர்தல் நடாத்துவது பொலிஸ் மாஅதிபரின் சிபார்சுக்கிணங்கவே என்று தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

இருந்த போதிலும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் ஜனதிபதித் தேர்தலை நடாத்துவதற்கேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர் வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும் கூட்டத்தில் யாழ்ப்பாணத்தில் தேர்தல் எப்படி நடாத்துவது என்பதுபற்றி தங்கள் அபிப்பிராயங்களை வெளியிடுமாறு ஜனதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களிடம் சந்திரானந்த டீ சில்வா கேட்பார் என்று 'திவயின' பத்திரிகை தெரிவித்துள்ளது. (ம-சி)

---

வடக்கே வரும்

# உணவுக் கப்பல்களுக்கு கடற்படையினர் பாதுகாப்பு

(கொழும்பு)

வடபகுதிக்கு உணவுப் பொருட்களை எடுத்து செல்லும் தனியார் கப்பலுக்கு கடற்படையினரின் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வெற்றிலைக்கேணியயில் 'ஓஷன் ரேடர்' கப்பல் மூழ்கடிக்கப்பட்டதை தொடர்ந்தே வடபகுதிக்கு உணவுப் பொருட்கள் விநியோகத்தில் ஈடுபடும் தனியார் கப்பல் சொந்தக்காரர்கள் தமது கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு கோரியிருந்ததனர்.

இதையடுத்தே உணவுப் பொருட்களை எந்தெந்த நாட்களில் வடபகுதிக்கு ஏற்றிச் செல்லப்படுகிறது என்ற திகதி ஒழுங்கின்படி கடற்படையினர் இந்தக் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கவுள்ளனராம்.

இதேவேளை வெற்றிலைக் கேணியில் மூழ்கடிக்கப்பட்ட 'ஓசன் ரேடர்' கப்பல் நிறுவனம் வடபகுதி உணவு விநியோகத்திற்கென மற்ருெரு கப்பலை வாடகைக்கு அமர்த்த இணக்கம் தெரிவித்துள்ளது. (சி)

---

# ஒஸியின் உடல்நிலை தொடர்ந்து கவலைக்கிடம்

(கொழும்பு)

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் ஒஸி அபயகுணசேகராவின் உடல்நிலைதொடர்ந்தும் கவலைக்கிடமாக இருந்துவருகிறது.

தலையில் இரண்டு சத்திர சிகிச்சைகள் அவருக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவருடன் குண்டுவெடிப்பின்போது காயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் பலரின் நிலையும் ஆபத்தான கட்டத்தில் இருப்பதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. -ரி

# "ஆயுதப் போரை தீர்க்கும் அணுகுமுறை பேச்சுவார்த்தை"

## அமைச்சர் அஷ்ரப் பேட்டி

(கொழும்பு)

ஆயுதப் போராட்டத்தை தீர்க்கும் ஒரு அணுகுமுறையே பேச்சு வார்த்தை ஐ. தே, க. அரசாங்கம் கடந்த 10வருடங்களாக பேச்சுவார்த்தை குறித்து அக்கறையின்றி செயற்பட்டு வந்தது. இனப்பிரச்சினையைத் தீர்க்கும் தார்மீகப்பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கின்றது என்பதனை நிராகரித்து எல்லாக்கட்சிகளதும் கூட்டுப் பொறுப்பு என்ற நிலையை எடுத்தது. சமநேரத்தில் ஆயுதப் படைகளின் மூலம் போராட்டத்தை மழுங்கடிக்கப்பார்த்தது. தமிழ்பேசும் மக்களது உரிமைப்போராட்டத்தை பயங்கரவாதப் போராட்டம் என வர்ணித்தது. இவ்வாறு முஸ்லிம் கரங்கிரஸ் தலைவரும் கப்பற்றுறை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் தெரிவித்தார்.

கொழும்பு பத்திரிகையொன்றுக்கு வழங்கிய பேட்டியிலே அவர்இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அப்பேட்டியில் கூறியதாவது:

பிரதமர் சந்திரிகா இனப்பிரச்சினையை தீர்ப்பதில் விசுவாசமாகவும் அக்கறையுடனும் இருக்கின்றார். இதனால் பயன்பெறுவது சிறுபான்மை சமூகங்களது கடமையாகும் இச்சந்தர்ப்பத்தினை தவறவிட்டால் பல வருடங்களுக்கு நாடு கஸ்டப்படவேண்டியேற்படும். எத்தனை பலமான ஆயுதப் போராட்டங்களும் பேச்சுவார்த்தைகளை நிராகரிக்காது என்பது எமது நிலைப்பாடு, எனவே பேச்சு வார்த்தை வெற்றியளிக்குமா இல்லையா என்ற கேள்விக்கே இடமில்லை.

பொ. ஐ. முன்னணிக்கும் முஸ்லிம்களுக்கும் இதுவரை எதுவித முரண்பாடுகளும் இல்லை. நாம் மிகவும் அன்னியோன்னியமாக பழகி வருகிறோம். அவர்களுக்கு எதிராக என்னிடம் எதுவுமில்லை. ஆனால் எனக்கு எதிராக அவர்களில் பலர் இயங்குவதாக கதைகள் அடிபடுகின்றன.

சந்திரிகாவை இந்நாட்டின் பிரதமராக்குவதற்கு மூல காரணம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பதனை முழு உலகும் ஏற்றுக்கொண்டுள்ளது என்றும் மேலும் அவர் தெரிவித்தார், -ரி

---

### சனிவரை இடைநிறுத்தம்

[கொழும்பு]

ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசாரக் கூட்டங்கள் எதிர் வரும் சனிக்கிழமை வரை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. [ரி- சி]

---

### புனரமைப்பு

[கொழும்புத்துறை]

யாழ். மாவட்டத்தில் கிராம சேவை அலுவலர் பிரிவுகள் தோறும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் புனரமைக்கப்பட்டுவருகின்றன.

இதேவேளை சங்கங்கள் இல்லாத கிராமங்கள் தோறும் புதிய மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டும் வருகின்றன. ]154]

---

ஐ. தே. க. வின் முன்னாள்

## 93அமைச்சுகளுக்கு எதிராக தனித்தனி ஆணைக்குழுக்கள்

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னைய அரசின் ஒவ்வொரு அமைச்சுக்கும் தனித்தனி லஞ்ச ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படும் என பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்.

முன்னைய ஐ. தே. க. அமைச்சுக்கள், இராஜாங்க அமைச்சுக்கள், திட்ட அமைச்சுக்கள் என மொத்தம் 93 அமைச்சுகளுக்கும் தனித்தனி லஞ்ச ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன எனவும் மக்கள் படுகொலைச் சம்பவங்களை விசாரிக்கவெனவும் ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படும் எனவும் பிரதமர் மேலும் தெரிவித்தார். -ரி

---

## தேர்தல் முடிவு வரும்போது ஜனாதிபதி பதவி விலகுவார்

[கொழும்பு]

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியிடும் நேரத்தில், ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க ஜனாதிபதி பதவியில் இருந்து விலகுவதற்கேற்ற நடவடிக்கையில் இறங்கியுள்ளார் என்று 'திவயின' தெரிவித்துள்ளது.

இதன் பிரகாரம் நவம்பர் 10ம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் இருந்து வெளியேறும் அவர் தனிப்பட்ட வாசஸ்தலத்துக்கு செல்வார் என்று ஜனாதிபதி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆனால் தற்போதைய ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க டிசம்பர் 20ம் திகதிவரை பதவியில் இருக்க முடியும் ஜனாதிபதி தேர்தல் நவம்பர் 9ல் அறிவிக்கப்பட்டபடியால் அந்தக் காலத்தில் இருந்து இரண்டு வாரங்கள் ஜனாதிபதி தொடர்ந்து பதவியில் இருக்கலாம் என்றும் 'திவயின' மேலும் தெரிவித்துள்ளது. (ம-சி)

---

### பொலிசார் மீது தாக்குதல்

[கொழும்பு]

கொள்ளையர் கூட்டமொன்றைப் பிடிக்கச்சென்ற அம்பலாந்தோட்டை பொலிஸ் நிலைய சப் இன்ஸ்பெக்டர், கான்ஸ்டபிள் இருவரையும் இனம் தெரியாத கோஷ்டி ஒன்று கொடூரமாக தாக்கிவிட்டு தப்பியோடியுள்ளது.

மயக்க நிலையிலிருந்த இரு பொலிசாரையும் அப்பாதையால் வந்த பொலிஸ் அத்தியட்சர் மாத்தறை ஆஸ்பத்திரியில் அனுமதித்தார். [சி]

---

### கண்காட்சி

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் நான்காவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நவம்பர் மாதம் 15 ம் திகதி செவ்வாய்க்கிழமை இணையப்பணிமனையில் கண்காட்சி ஒன்று இடம்பெறவுள்ளது.

இணையத்தில் நடைபெறும் கண்காட்சியில் அங்கத்துவம் பெற்றிருக்கும் 16 அரச சார்பற்ற நிறுவனங்கள் கலந்து கொள்ளவுள்ளன. -154

---


அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்

நடாத்தும்

## தொழிற்திறன் அபிவிருத்தி பயிற்சி

நெறிகளுக்கான

விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பயிற்சி நெறிகள் :

1. தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்து பயிற்சி நெறி
2. ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்து பயிற்சிநெறி
3. உடையமைத்தல் பயிற்சி நெறி
4. தையல் இயந்திரம் திருத்தற் பயிற்சி நெறி ( பெண்கள் மட்டும் )

பயிற்சி நெறி நடைபெறும் இடம் :

106, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

தகைமைகள் :

1. தமிழ் / ஆங்கில சுருக்கெழுத்துப் பயிற்சி நெறிக்கு ஜி. சி. ஈ. ( சாதாரணம் ) பரீட்சையில் தமிழ் / ஆங்கிலம் மொழிகளில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. ஏனைய பயிற்சி நெறிக்கு ஜி.சி.ஈ. ( சாதாரணம் ) பரீட்சையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

°° விண்ணப்ப முடிவு திகதி :
10 – 11 – 94

°° விண்ணப்பங்கள் யாவும் சுயவிபரங்களுடன்

தலைவர்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
106, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். (ஏ-4456)


---

## கல்லடி கோட்டைமுனையில் மீன் பிடிக்கத் தடை

[மட்டுநகர்]

மட்டு. கோட்டைமுனையிலிருந்து கல்லடிவரை மீன்பிடிப்பதற்கு பாதுகாப்புப் படையினர் தடை விதித்துள்ளனர்.

பாதுகாப்புக் காரணங்களையொட்டியே இப்பகுதியில்மீன் பிடிக்க தடைவிதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படையினரின்இத்திடீர் மீன்பிடித் தடை நடவடிக்கையினால் பெருமளவு தமிழ் மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. -ரி

---

### மண்ணெண்ணை விநியோகம்

[பண்டத்தரிப்பு]

யாழ் சுகாதார திணைக்கள ஊழியர்களுக்கு தலா 4 லீற்றர் மண்ணெண்ணை லீற்றர் 25 ரூபா வீதம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. -72

---

### அகதி முகாம்கள் புனரமைப்பு

(வட்டுக்கோட்டை)

சண்டிலிப்பாய் கட்டுடையில் உள்ள அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினர் சண்டிலிப்பாய் உதவி.அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள அகதிகள் முகாம்களை கண்காணித்து வருவதோடு கொட்டகைகளை வேய்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருசின்றனர். (138)

---

இராணுவ சதி;

## குற்ற புலனாய்வு பிரிவு 'சிசிலை' விசாரிக்கும்

[கொழும்பு]

நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் பொதுசன ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்தால் ஒரு இராணுவச் சதியொன்றின் மூலம் ஆட்சியைக் கைப்பற்ற முன்னைய அரசுடன் முன்னாள் இராணுவ தளபதி சிசில் வைத்தியரத்ன ஈடுபட முயற்சித்தார் என்று வெளியான தகவல்கள் குறித்து குற்றப் புலனாய்வுப் பொலிசார் விசாரணையில் இறங்கியுள்ளனர் என்று 'லக்பிம' பத்திரிகை தெரிவித்துள்ளது.

தற்பொழுது தாய்வான் தூதுவராகக் கடமையாற்றும் சிசில் வைத்தியரத்தினாவிடம் அங்கு சென்று விசாரிப்பதற்கு குற்றப்புலனாய்வுப் பொலிசார் திட்டமிட்டுள்ளனராம்.

சில வேளைகளில் சிசில் இலங்கைக்கு வந்தால் பொலிசார் அங்கு செல்லமாட்டார்கள் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. [ம-சி]

---

மட்டக்களப்பில்

## டீசல் தடை நீக்கம்

[மட்டுநகர்]

மட்டக்களப்பில் டீசல் தடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உழவு இயந்திர உரிமையாளர் ஒருவர் 24 லீற்றர்வரை வயல்களுக்குக் கொண்டு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக மட்டக்களப்புப் பகுதியில் பெற்றோல், டீசல் போன்ற எரிபொருட்களுக்கு படையினரால் தடை விதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

டீசலுக்கான தடை நீக்கப்பட்ட போதிலும் கட்டுப்படுத்தப்பட்ட அளவிலே இங்கு டீசல் விநியோகிக்கப்பட்டு வருகிறது. -ரி

---

## சமாதான முயற்சிகள் நம்பிக்கை இழக்கவில்லை

[கொழும்பு]

தமிழீழ விடுதலைப் புலிகளோ அல்லது யாழ்ப்பாண மக்களோ எந்த வகையிலும் புதிய அரசுடனான சமாதான முயற்சிபற்றி நம்பிக்கை இழந்துவிடவில்லை என்று விடுதலைப்புலிகள் உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளதாக 'தினமின' பத்திரிகையின் செய்தி ஆசிரியர் எம். டி. சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்பினை அடுத்து சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஒத்திவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. -ரி

நல்லூர் இணைநூலகம்.



மணிவாக்கு

துறவைக் காட்டிலும் கர்மயோகம் மேலானது. விருப்பு வெறுப்பு, நன்மை தீமை ஆகியவற்றை நீக்கியவன் எளிதில் பந்தத்திலிருந்து விடுபடுகிறான். அவனே சன்யாசி.

- பகவத்கீதை

## நமது நோக்கு

### இன்னுமோர் சிறிமா!

ஐ. தே. க. சார்பாக ஜனாதிபதித் தேர்தலிற் போட்டியிட சிறிமா திசநாயகா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பல மணி நேர விவாதத்தின் பின் - வாதப் பிரதிவாதங்களின் பின் - இதுபற்றி முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வந்துள்ளன.

1956ல் பிரதமராக வந்த பண்டாரநாயக்கா 1959ல் கொலை செய்யப்பட்டபின் 1960 மார்ச் மாதம் நடந்த தேர்தலில் சுதந்திரக்கட்சி வெற்றி பெறவில்லை.

ஆனால் - 1960 ஜூலை மாதம் மீண்டும் தேர்தல் நடந்தபோது, சிறிமா பண்டாரநாயக்கா சுதந்திரக்கட்சிக்குத் தலைமை தாங்கி வெற்றியை ஈட்டுவதற்கு உதவினார்.

இதற்கான பல காரணங்களில் ஒன்றுதான் அனுதாப அலை!

இந்த அனுதாப அலையை மாத்திரம் மூலதனமாகக் கொண்டு, தேர்தலிற் போட்டியிட மறைந்த திசநாயக்காவின் மனைவி சிறிமாவை ஐ. தே. க. வேட்பாளராக நிறுத்தியிருக்கிறது.

மக்கள் அனுதாப அலை நிரந்தரமானதா? அந்த அனுதாப அலை நீதியான, நியாயமான முடிவுகளைத் தருமா?

பொதுசன முன்னணி சார்பாகப் போட்டியிடும் சந்திரிகா தனது கணவனை மாத்திரமல்ல, தந்தையையும் படுகொலைகளால் இழந்தவர் என்பதும் கவனத்திற்குரியது.

அதுமாத்திரமல்ல - ஐ. தே. க. விற்குள் ஏற்கனவே இருந்த பிளவுகள் மேலும் அதிகரிக்கும் சாத்தியக் கூறுகளே தென்படுகின்றன.

ஐ. தே. க. செய்த நியமனம் எப்படிச் செய்யப்பட்டது என்பதும் ஆராயப்பட வேண்டியதே!

ஐ. தே. க.வின் ஒரு பிரிவினர் ரூபவாஹினி படப்பிடிப்பாளரைத் தாக்கியதும், சிறிகோத்தாவிற்கு முன் நின்று திசநாயக்காவின் மனைவிக்குச் சார்பாகக் கோஷமிட்டதும் கவனிக்கப்பட வேண்டியவை.

வன்முறைகள் போன்றவற்றைத் தூண்டி அரசியல் இலாபம் பெறுவோர் வன்முறைகளாலே அழிய நேரிடும் என்பதை ஏனோ தெற்கிலே உணராமல் இருக்கிறார்கள்!

குறுக்கு வழிகளிலேயே அரசியல் இலாபம் பெற்றுவிடலாம் என்ற எண்ணம் அங்கு மறையும் காலம் வரும்போதுதான் நாட்டிலே நிரந்தரமான சுபீட்சம் ஏற்பட வழிபிறக்கும்.

இன்னுமோர் சிறிமா களத்திற் குதித்துள்ளார். தெற்கின் வாக்காளர்கள் எப்படித் தீர்மானிப்பார்கள் என்பதிலேயே அடுத்த அரசியற் காய் நகர்த்தல் தங்கியுள்ளது!

# தமிழர் தலைவரை தெரிவு செய்வது தமிழ மககளேயன்றி அரசு அல்ல

## - சந்திரிகா கூறுகிறார்

[கொழும்பு]

தமிழர்களின் தலைவர்களை தெரிவு செய்வது தமிழர்களேயன்றி இலங்கை அரசு அல்ல என பிரதமர் சந்திரிகா 'சண்டே ஐலன்ட்'ற்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டி இங்கே கேள்வி-பதிலாக தரப்படுகிறது.

கே; சமாதானப் பேச்சுக்களில் நீங்கள் திருப்தியடைகிறீர்களா?

ப: இப்பொழுதுதான் பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன. நாம் இப்போதும் புனர்வாழ்வு பற்றியும் புனரமைப்பு பற்றியுமே பேசிக்கொண்டிருக்கிறோம், இதுவரை நடைபெற்ற பேச்சுக்கள் குறித்து திருப்தியடைகின்றேன்.

கே: அப்படியானால் புலிகள் ஏன் இப்போதும் அரச படைகள் மீது தாக்குதல் நடாத்துகிறார்கள்? உதாரணமாக 'சாகரவர்த்தன' தகர்ப்பு?

ப: எனது பிரதிநிதிகள் மூலம் அறிந்ததின்படி அவர்கள் படையினரின் தாக்குதலுக்கு பதில்தாக்குதலே நடாத்துகிறார்கள். மட்டக்களப்பில் அண்மையில் 10 புலிகள் படையினரின் தாக்குதலில் கொல்லப்பட்டனர். புலிகள் இன்னமும் அரசின்மீது நம்பிக்கை கொள்ளவில்லையெனவும் நினைக்கிறேன்.

கே: சமாதானம் உருவாகி வடக்கு - கிழக்கில் ஜனநாயக சூழ்நிலை உருவாகுமானால் பொ. ச. மு. அரசு தமிழ் மக்களின் தலைவர் என பிரபாகரனை ஏற்றுக்கொள்ளுமா?

ப: மக்கள் தான் தங்கள் தலைவரை தெரிவுசெய்ய வேண்டுமே தவிர அரசு இவ்வாறான வேலைகளில் ஈடுபடாது. அது அரசின் வேலையுமல்ல. ஜனநாயக சூழ்நிலை தோன்றினால் அதை மக்கள் தீர்மானிப்பார்கள். மச்கள் தெரிவு செய்பவரை அரசு ஏற்றுக்கொள்ள தயாராயுள்ளது.

கே: பொ.ச.மு. அரசுடன் இணைந்து செயற்படும் தமிழ்க் குழுக்கள் சமாதான பேச்சுக்கள் குறித்து என்ன கூறுகின்றன?

ப: அவர்களும் சமாதானத்தை விரும்புகிறார்கள்.

கே: புலிகள் ஈழத்திற்குக் குறைந்த தீர்வை ஏற்பார்களா? இந்தப் பிரச்னைக்கு பொ. ச. மு. அரசு சமஷ்டி முறையை தீர்வாக வழங்குமா?

ப: ஈழத்திற்கும் குறைந்த நல்லதொரு தீர்வை ஏற்றுக்கொள்ளத் தயாரென புலிகள் கூறியுள்ளனர். எமது அரசு அதிகாரப் பரவலை வழங்கத் தயாராயுள்ளது. எனினும் இப் பிரச்னைக்கான தீர்வு பேச்சுக்கள் மூலமே எட்டப்படவேண்டும். அதிகாரப் பரவலாக்கம் எப்படி இருக்க வேண்டுமென்பது குறித்துக் கூற இது பொருத்தமான நேரமில்லைஎன நினைக்கிறேன், பேச்சுக்கள் வெளிப்படையாக நடைபெறும். அதில் பலவற்றுக்கும் தீர்வு காணமுடியுமென நினைக்கிறேன்.

கே: அரச பிரதிநிதிகள் யாழ். நகர் சென்றபோது அவர்களை பெருமளவு மக்கள் வரவேற்றார்கள். இதன்மூலம் புலிகளிடமிருந்து மக்களைப் பிரித்து அவர்களது அனுதாபத்தைப் பெற பொ, ச. மு. திட்டமிடுகிறதா?

ப: இல்லை. நாம் செய்வதை விட வடபகுதிமக்கள் சமாதானத்தைக் கூடுதலாக விரும்புகிறார்கள். இதைவிட வேறொன்றுமில்லை.

கே: ஜனதிபதி தேர்தலில் எவ்வளவு பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெறுவீர்களென நினைக்கிறீர்கள்?

ப: ஐ.தே.க. வில் காமினி எதிர்ப்புக்குழு இருக்கிறது. எனவே பத்துலட்சம் அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெறுவேன்என நினைக்கிறேன்.

கே: நீங்கள் ஜனாதிபதியானால் அடுத்த பிரதமர் யார்?

ப: கட்சி அதனைத் தீர்மானிக்கும்.

கே: ஜனாதிபதியாக தெரிவானால் நிதி அமைச்சர் பதவியை நீங்கள் வைத்திருப்பீர்களா?

ப: அதனை தக்க வைத்திருக்கவே விரும்புகிறேன். ஏனெனில் இந்த உலகில் என்னை மட்டுமே நான் நூறுவீதம் நம்புகிறேன். இது ஒரு சிக்கலான அமைச்சு.

கே: ஜனாதிபதி தேர்தலின் பின் அமைச்சரவை மாற்றம் ஏற்படுமா?

ப: தற்போது அமைச்சரவை மாற்றத்திற்கு அவசியமில்லை. அடுத்த இரு மாதங்கள் பொறுத்திருந்து பார்ப்போம். —சி

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994–10–27
வியாழன் இரவு

08-01 சொல்லுங்கள் பார்க்கலாம்
08-10 சித்தமருத்துவ குறிப்புகள்
08-20 உழைப்போம் உயர்வோம்- நிகழ்ச்சியில் ''தண்ணீர் குறுநாடகம்''
08-30 செய்திகள்
08-40 சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதல் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி- நாமகள் எழுதிய ''ஆரம்பச் சுவடுகள்''

1994–10–28
வெள்ளி காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 மணியாரம்
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 தாயகப் பாடல்கள்

# ஜனாதிபதி தேர்தலுக்கு முன் புலிகள் தாக்குதல் நடத்தலாம்

## – புலனாய்வுத்துறை எச்சரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் விடுதலைப்புலிகள் படையினருக்கு எதிராக பாரிய தாக்குதலை நடாத்தவுள்ளதாக புலனாய்வுத்துறையினர் எச்சரித்துள்ளனராம்.

அண்மைக்காலமாக புலிகள் யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு அரசை வற்புறுத்தி வருவதால் இவ்வாறானதொரு தாக்குதலை புலிகள் நடாத்தலாமெனவும் அவ்வட்டாரங் தெரிவித்துள்ளன.

இதேவேளை இவ்வாறான தாக்குதலை நடாத்துவதன் மூலம் புதிய அரசுக்கும் இராணுவத்திற்குமுடையில் பிரிவொன்றை ஏற்படுத்தவும் புலிகள் முயல்வதாகவும் இராணுவ தலைமைப்பீடம் கருதுகிறதாம்.

கிழக்கிலும் புலிகள் படையணி ஒன்று ஊடுவியிருப்பதாக கிடைத்த தகவல்களையடுத்து படையினர் கிழக்கில் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர், வடக்கிலும் இவ்வாறு படையினர் உஷார் படுத்தப்பட்டுள்ளதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சி)

## புலதும் பத்தும்

### நூல்நிலையம்!

போராளிகள் நினைவாகப் பல பொதுப் பணிகள் நடப்பது போற்றத்தக்கது.

அந்தவகையில்— சாவகச்சேரியில்... கலைஞன் வேந்தன் வீரபாண்டியன் நூல் நிலையம் பொதுமக்களுக்கும் மாணுக்கருக்கும் நல்ல சேவையாற்ற முன்வந்திருக்கிறது, இது... ஒரு போராளியின் நினைவாக நிறுவப்பட்டது,

இங்கு வரும் மாணுக்கர்கள் விஞ்ஞானம், தொழில்நுட்பம், புவியியல் போன்ற பல துறைகளிலும் அறிவை வளர்த்திட ஆர்வமாயுள்ளார்கள். இதனை நிறுவியவர்களும் துடிப்போடு இயங்குகிறார்கள்!

எனவே... நூல்கள் சஞ்சிகைளை அன்பளிப்புச்செய்து உதவ வேண்டாமோ?

—மயூரன்

## காடு வளர்ப்பு நாடு செழிப்பு

# பொ.ச.முவுடன் உடன்பாடு ஏற்படுத்த இ.தொ.கா.முயற்சி

(கொழும்பு)

ஐ. தே. கவுடனான உடன்பாட்டை ரத்துச் செய்து பொ. ச. முவுடன் திரு. தொண்டான் தலைமையிலான இ. தொ. கா. உடன்பாடொன்றை மேற்கொள்ளவுள்ளதாக 'சண்டே ரைம்ஸ்' தெரிவித்துள்ளது.

இதுபற்றி திரு. தொண்டமான் தெரிவிக்கையில்,

இரு பெரும்பான்மை சிங்கள கட்சிகள் முன்பும் நான் வைத்த 6 அம்சக் கோரிக்கையை அவை ஏற்றுள்ளமை எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. கடந்த 17 வருடங்களாக தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்காக ஐ. தே. க, அரசுடன் ஒவ்வொரு அங்குலத்திற்காகவும் சண்டை பிடிக்க வேண்டியிருந்தது.

ஐ. தே. கவிடமிருந்து ஒவ்வொன்றையும் பெற சத்தியாக்கிரகங்களையும், வேலை நிறுத்தத்தையும் நடாத்தவேண்டியிருந்தது. எமக்குத் தேவையானவற்றை எல்லாம் கேட்டபோது தருமளவிற்கு பலமாக இருக்கவில்லை எனவும் கூறினார்.

பொ. ச. மு. அரசு செல்லச்சாமியுடனான தனது நல்லுறவைத் துண்டித்துக்கொள்ள வேண்டுமென திரு. தொண்டமான் வலியுறுத்தியுள்ளார், செல்லச்சாமியை தொண்டமான் துரோகி எனவும் பிரச்னையை உருவாக்குபவர் எனவும் கருதுவதும் குறிப்பிடத்தக்கது, -சி

## சுகாதாரப் பயிற்சிநெறி

(வட்டுக்கோட்டை)

நவாலி, ஆனைக்கோட்டை பிரதேசங்களைச் சேர்ந்த பதினறு பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான சுகாதாரப் பயிற்சிநெறி ஒன்று நவாலி வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சியானது ஒவ்வொரு மாதமும் 17ம் திகதி நடாத்தப்பட்டு வருகிறது.

—139

### உடுகம்பொலவின் பாதுகாப்பு:

# மாதம் ரூ. 4லட்சம் செலவு

(காழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் துறைமுகச் சரக்குக் கூட்டுத்தாபனத்தில் உப தலைவராக கடமையாற்றியமுன்னாள் பிரதிப்பொலிஸ் மாஅதிபர் பிரேமதாசா உடுகம்பொலவின் பாதுகாப்புக்கு மாதமொன்றுக்கு 3 லட்சத்து 95ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகை செலவழிக்கப்பட்டுள்ளதென்று யுக்திய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதேவேளை உடுகம்பொலவுக்கு சி. டி. 250 ரக பென்ஸ் கார் ஜெர்மனியில் இருந்து இறக்குமதி செய்து கொடுக்கவும் நடவடிக்கைஎடுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக கடனாக 35 லட்சம் ரூபா துறைமுக அதிகாரியால் கொடுக்கப்பட்டுள்ளதென்றும் 'யுத்திய' மேலும் தெரிவித்துள்ளது.

தற்போதுஉடுகம்பொல தமது பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதும் தெரிந்ததே. -ம-சி

## இன்று

(யாழ்ப்பாணம்)

பாலையைச் சோலையாக்கும் முயற்சியின் அடுத்தபடி 200 ஏக்கர் சவுக்கம்காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் வேரூன்றும் நிகழ்ச்சி இன்று மணற்காடு சூழல் [பாதுகாப்பு நிறுவனத்தில் காலை 9-30 மணிக்கு நடைபெறும்.

# ஐதேக-பொசமு ஆதரவாளர் நாடாளுமன்றில்
# கொழும்பில் முறுகல்நிலையில் காமினிக்கு அஞ்சலி

]கொழும்பு)

காமினியின் கொலையால் ஐ. தே. க.ஆதரவாளர்ளுகக் கும்பொ. ச. மு. ஆதரவாளர் களுக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

இதனுல்தான் நாட்டில் தற்போது ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருப்பதாக பிரதிபாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்,

காமினியில் கொலையில் ஆத்திரமுற்றுள்ள ஐ. தே, க. ஆதரவாளர்கள்அடுத்த வரும் நாட்களில் வன்முறைகளில் கூடஇறங்கலாமெனவும் கருதப்படுவதால் கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதேவேளை நேற்று இரவு 10 மணிக்கு அமுலுக்கு வந்த ஊரடங்கு உத்தரவு இன்று அதிகாலை 4 மணிக்கு நீக்கப்பட்டது. ம-சி

(கொழும்பு)

காலஞ்சென்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு. காமினி திஸநாயக்காவின் பூதவுடலுக்கு, நேற்று நாடாளுமன்றத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி பேதமின்றி தமது அஞ்சலியைச் செலுத்தினர்கள்.

திரு. காமினி திஸநாயக்காவின் பூதவுடல் நேற்று பிற்பகல் 2-15மணியளவில் பூரண இராணுவ மரியாதையுடன் நாடாளுமன்றத்துக்கு கொண்டுவரப்பட்டபோது சபாநாயகர் கே, பி. ரட்ணுயக்காவும், பிரதமர் திருமதி சந்திரிகாவும்பொறுப்பேற்று, நாடாளுமன்றத்தின் வெளிமண்டபத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் வைத்தனர்.

திரு. காமினியின் பூதவுடலுக்கு சபாநாயகரும், பின்பு பிரதமரும் மலர் வளையங்களை வைத்து அஞ்சலி செலுத்தினுர்கள். இதனைத் தொடர்ந்து சகல எம். பி.க்களும் வெளிநாட்டுராஜதந்திரிகளும் நாடாளுமன்ற ஊழியர்களும் அஞ்சலி செலுத்தினர்கள்.

-வி-சி

★ காமினியின் மனைவி தோற்றல்

## ஐ. தே. க.வின் முழுப் பொறுப்பும் ரணில் வசம் வந்துவிடும்!

(கொழும்பு)

'ஜனதிபதித் தேர்தலில் மறைந்த காமினியின் மனைவி ஸ்ரீமா திஸநாயக்கா தோல்வி அடைந்தால் ஐ. தே. கட்சியின் முழுப்பொறுப்பும் முன்ளுள் பிரதமர் திரு. ரணிலிடமே ஒப்படைக்கப்படும். என்று நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ. தே. கட்சிக் குழுக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

திரு. காமினியின் மறைவை யொட்டி புதிய ஜனதிபதி வேட்பாளரை தெரிவு செய்வதற்காக நடைபெற்ற ஐ.தே. கட்சிக் கூட்டத்தில் திரு. ரணில் குழுவினருக்கும் திரு. காமினியின் குழுவினருக்குமிடையில் பலத்த கருத்து வேறுபாடுகள் நிலவியதாகவும் இறுதியில் இரு பகுதியினரையும் திருப்திப் படுத்துவதற்காக திரு. ரணில் எதிர்க்கட்சி தலைவராகவும் திருமதி ஸ்ரீமா காமினி ஜனதிபதி வேட்பாளராகவும் நியமிக்கப்பட்டார்களாம்.

ஜனதிபதித் தேர்தலில் காமினியின் மனைவி ஸ்ரீமா திஸநாயக்கா தோல்விஅடைந்தால் கட்சியின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் திரு, ரணிலே பொறுப்பாக இருப்பார் என்றும் கட்சி இறுதியில் முடிவு செய்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி-சி)

## பிரதமருக்கு எதிராக சுவரொட்டிகள்

(கொழும்பு)

பிரதமர் சந்திரிகாவுக்கு எதிராக கொழும்பின் பல பகுதிகளிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருப்பதாக ஏ. எப். பி. செய்தி தெரிவித்தது.

காமினியின் கொலையையடுத்து ஐ. தே, க. ஆதரவாளர்கள் இவ்வாறு கண்டன சுவரொட்டிகளை ஒட்டியிருக்கலாமெனவும் கூறப்படுகிறது.

இதேவேளை கொழும்பு, கண்டி, மற்றும் மலையகப் பகுதிகள் உட்பட பல நகரங்களிலும் காமினிக்கு அஞ்சலி தெரிவித்து பெருமளவு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

-ம-சி

## குண்டு வெடிப்புச் சம்பவம்: 25 பேர் கைது

(கொழும்பு)

கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்'

இதேவேளை குண்டுவெடிப்பு சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு அருகிலுள்ள தனியார் விடுதிகளில் தங்கியிருந்த யாழ்ப்பாணத் தமிழர்கள் பலர் இரகசியப் பொலிசாரால் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

மேலும் கொலையாளிகளை கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் இரகசியப் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். ரி-சி

காமினியின் கூட்டத்தில்

## பெருமளவு பொலிஸார் கடமையிலிருந்தனர்

(கொழும்பு)

காமினி திஸநாயக்கா கொல்லப்பட்ட பாலத்துறைக் கூட்டத்தில் சீருடை அணிந்த பொலிசாரை விட 190 க்கும் கூடுதலான சாதாரண பொலிசாரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாக பொலிஸ் மா அதிபர் பிராங் டி சில்வா கூறியுள்ளார்.

காமினியின் உயிருக்கு அச்சுறுத்தல் இருந்ததை ஏற்றுக் கொண்ட பொலிஸ் மா அதிபர், அதன் காரணமாகவே விஷேட பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறினுர்.

இவரது கொலை குறித்து முழுஅளவிலான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினுர். - சி

## யாழ். மாவட்டத்திலும் தேர்தல் நடத்த முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் ஜனதிபதித் தேர்தலை நடாத்துவதற்கான ஏற்பாடுகளில் தேர்தல் திணைக்களம் ஈடுபட்டு வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்விடயம் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வா யாழ். அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகருடன் ஆராயவுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

யாழ்.மாவட்டத்திலும் இத் தேர்தலை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு தேர்தல் திணைக்களம் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக 'சண்டேடைம்ஸ்' கூறியுள்ளது. (க-சி)

## ரூபா 260 விசேட படி ஓய்வூதியருக்கு கிடைக்கும்

(கொழும்பு)

ஓய்வூதியம் பெறுவோர் விசேட வாழ்க்கைச் செலவு கொடுப்பனவாக 260 ரூபாவை பெறவுள்ளனர். இந்தத் தொகை 1988ம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் வழங்கப்படவுள்ளது.

இந்தக் கொடுப்பனவில் வழங்கப்படாதிருக்கும் மிகுதித்தொகைவருடத்தில் முதல் ஐந்து மாதங்களுக்காக வழங்கப்படும் என்று அமைச்சரவை பேச்சாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

இதற்காக 36 கோடியே 10 லட்சம் ரூபாவை ஒதுக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது. இந்த விசேட வாழ்க்கை செலவுக் கொடுப்பனவு சில காலமாக நிறுத்திவைக்கப்பட்டது. ஓய்வூதியம் பெறுவோர் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க முன்னைய அரசாங்கம் இதனை யூலை மாதத்தில் வழங்க ஆரம்பித்ததெனவும் தெரிவித்தார். (ம-சி)

அரசு மறுப்பு

(1-ம் பககத்தொடர்ச்சி)

இது பற்றி பிரதிபாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த கருத்து கூறுகையில்; திரு. திஸநாயக்கபுவுக்கு போதிய பாதுகாப்பா அளிக்கப்படவில்லை எனக் கூறுவது முற்றிலும் தவருனது. அமைச்சர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் என்ற வகையில் திரு. காமினிக்கும் வழங்கப்பட்டிருந்தது.

ஜனதிபதி வேட்பாளராக திரு, காமினி நியமிக்கப்பட்ட பின்னர் அவருக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டதாகவும் கூறினுர். (சி)

அரசு-புலிகள்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கைதுசெய்யப்பட்டிருந்த விடுதலைப் புலிகளை விடுதலை செய்ததன் மூலமும் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வடபகுதியிலிருந்து மக்கள் தாராளமாக வர அனுமதித்ததன் மூலமும் பிரதமர் சந்திரிகா தலைமையிலான அரசு, தலைநகர் கொழும்பில் விடுதலைப்புலிகள் சுதந்திரமாக இயங்க வழிவகை செய்து கொடுத்துள்ளது.

திரு. காமினிதிஸநாயக்கா இத் தேர்தலில் வெற்றி பெற்றுவிடுவார் என தெரிந்து விடுதலைப் புலிகள் அரசுக்கு உதவும் வகையில் அவரை கொலைசெய்துவிட்டனர்.

காமினியின் பாதுகாப்பு குறித்து பாதுகாப்பு அமைச்சிடமிருந்து விடுக்கப்பட்ட எச்சரிக்கையை அரசு கவனத்தில் எடுத்திருந்தால் இத்தகைய சம்பவத்தை தவிர்த்திருக்கலாம் எனவும் கூறியுள்ளனர். - சி

விடுதலைப்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அந்த வழியில் தான் காமினி திஸநாயக்காவின் கொலையும் அமைந்துள்ளது என்ருர்.

இதேபோன்றே எதுவித அதிகாரமுமின்றி புலிகள் தான் கொலையாளிகள் எனக் கூறுவது பிழையானது. இதன் மூலம் உண்மையான கொலையாளிகள் தப்பிவிடுவார்கள் எனவும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த கூறியுள்ளார். ம-சி

ஊரடங்கை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அவர்கள் எப்படி நாம் கொழும்புக்கு வருவது? வருவதற்கு இரவில் பஸ்கள் இல்லை. வந்தாலும் தங்குவதற்குகொழும்பில் இடமில்லை என்றும் கேட்டிருக்கின்ருர்கள்.

இதற்காக அரசாங்கத்தை ஊரடங்குச் சட்டத்தை நீக்குமாறு கோரியுள்ளோம் உடனடியாக அவர்கள் இதனை நீக்காது விட்டால் ஊரடங்குச் சட்டத்தை மீறுலோம். அப்பொழுது எங்களைக் கைது செய்யட்டும்'' என்ருர், (ம)

தற்போதைய

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறினுர்.

இக்குண்டுவெடிப்பையடுத்து இருதரப்புப் பேச்சுக்களும் கைவிடப்பட்டதாக வெளிவந்த செய்திகளையும் அவர் முற்ருக மறுத்துள்ளார்.

இதேவேளை கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்பையடுத்து சமாதானப்பேச்சுவார்த்தைகள் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக 'ஐலண்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது. -வி-ரி-சி

இராணுவ

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மதி சந்திரிகா வெற்றி பெற்ருல் இவர்களை பதவி நீக்க அவர் சந்தர்ப்பம் பார்த்துள்ளாராம். அண்மைக்காலமாக பிரதமரின் சமாதான முயற்சிக்கு இவர்கள் பெரும் தடையாக உள்ளதாலேயே இவர்களை பதவி நீக்க பிரதமர் ஆலோசித்துள்ளாராம்.

இதேவேளை பிரதமருடன் இராணுவத்தினர் கருத்து முரண்பகடுகளை வளர்த்து வருவது போல் விமானப்படையினரோ கடற்படையினரோ நடந்து கொள்வதில்லை என்றும் அவர்கள் பிரதமருடன் நல்லமுறையில் ஒத்துப்போவதாகவும்தெரிவிக்கப்படுகிறது. (சி)

இனக்கலவரததை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வதந்திகளை நம்பக்கூடாதெனவும் தெரிவத்தார். மேலும் காமினியின் கொலை குறித்து வெறும் ஊகங்களே நிலவுவதால் விசாரணைகள் மூலம் உண்மை உறுதிப்படுத்தப்படும் வரை எதனையும் கூற முடியாதெனவும் தெரிவித்துள்ளார். (ம - சி]

வெளிநாட்டு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்படுமென பொலிஸ் மா அதிபர் கேட்டபோதே விக்கிரம வீரசூரியா இலங்கை குற்றப் புலனுய்வுதுறையில் தமக்கு நம்பிக்கை இருப்பதாகவும் வெளிநாட்டு உதவி தேவையில்லை எனவும் கூறிவிட்டாராம்.

கொழும்பில் முன்பு நடைபெற்ற கொலைகள் பற்றிய விசாரணைகள் போலன்றி இது துரிதமாகவும் நேர்மையாகவும் நடாத்தப்படுமெனவும் அரசு கூறியுள்ளது. -சி

கொலைக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிராங்டி சில்வாகூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் சம்பவம் நடைபெற்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட மண்டையோடு, உடல் உறுப்பொன்றின் இருபகுதிகள், ஒரு சயனைட் குப்பி இவைகள் எல்லாம் இந்த தாக்குதல் ஒரு தற்கொலை குண்டுதாரியால் நடாத்தப்பட்டிருக்கலாம் என்பதை காட்டுவதாக அவர் குறிப்பிட்டார்.

ஒருதலையைவைத்து எதுவுமே கூறிவிடமுடியாதென அமைச்சர் ரத்வத்த கூறியுள்ளார். -சி

காமினியின்

(1-ம் பக்கத்தொடாச்சி)

இவ்வாறு கொழும்பில் உள்ள அரசியல் விமர்சகர் ஒருவர் கூறியுள்ளதாக ஏ. எப். பி. செய்தி கூறியது. அவர் இது பற்றி மேலும் கூறுகையில்;

வெடிகுண்டு விபத்தில் காமினி இறந்ததினுல் எதிர்வரும் ஜனுதிபதித் தேர்தலில் அவரின் மனைவி சிறிமா திஸாநாயக்காவுக்கு அனுதாப வாக்குகள் ஓரளவு கிடைத்தாலும் பொதுசன ஐக்கிய முன்னணி வேட்பாளர் திருமதி சந்திரிகாவை ஜனுதிபதித் தேர்தலில் தோற்கடிக்கமுடியாது, என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம், ஜனுதிபதிதேர்தல் பிரச்சாரக்கூட்டங்களில் காமினியின் மனைவி சிறிமா, பெருமளவில் கலந்து கொள்ள மாட்டார், என்றும் கூறப்படுகின்றது. வி-சி

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Nomber B/16336/B.